මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ ලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல. 2026/03** **2026.02.10**

**தேருநர் இடாப்பு மீளாய்வு - 2026**

2026 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பு மீளாய்வு செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டில் கிராம அலுவலர்கள் வீடுகளுக்கு வருகை தருவதில்லையென்பதோடு, 2025 தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படுகின்ற மற்றும் 2026 ஆம் ஆண்டிற்காக உட்சேர்க்கப்படுவதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்கின்ற பெயர்களின் அடிப்படையில் இந்த ஆண்டில் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எவரேனுமொரு நபரின் பெயர் 2025 தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருப்பின் 2026 ஆம் ஆண்டிற்கும் 2025 தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த முகவரியின் கீழ் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பதோடு, அவர்கள் எந்தவொரு படிவத்தையும் பூரணப்படுத்த வேண்டியதில்லை. அத்துடன், 2025 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாத அல்லது 18 வயது பூர்த்தியடைதலின் அடிப்படையில் முதல் தடவையாக தேருநராக பதிவு செய்யப்படுவதாயின் அல்லது 2026 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி மாற்றமடைந்தால் 2026 ஆம் ஆண்டில் தேருநராக பதிவு செய்வதற்காக 2026/ER படிவத்தை பூரணப்படுத்தி கிராம அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

மேலும் பிரஜைகளுக்கு www.elections.gov.lk இணையத்தளத்தினூடாகவும் தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்காக இணையவழியில் (Online) கோரிக்கை விடுப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் தேருநராக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி கிராம அலுவலர் அலுவலகங்களில் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் போன்றே ec.lk/vrd இடையிணைப்பி (Link) ஊடாக மற்றும் இங்கு கீழே காணப்படும் QR குறியீட்டை ஸ்கேன் (Scan) செய்வதனூடாகவும் பரீட்சித்துக்கொள்வதற்கு முடியும்.

**வாக்காளர் தின நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தேர்தல் இ - சேவைகள்.**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்கள் இறைமையுடன் தொடர்புடைய சர்வஜன வாக்குரிமை பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நோக்கத்தில் 2026.02.01 ஆம் திகதி நினைவுகூரப்படும் வாக்காளர் தினத்திற்கு இணையான வகையில் வாக்காளர் தின நிகழ்ச்சித் திட்டங்கள் பெப்ருவரி மற்றும் மார்ச் மாதங்களில் நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடக்கப்படும் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் வாக்காளர் தினத்தின் தொனிப்பொருள்,
**"டிஜிட்டல் பங்கேற்பினூடாக ஜனநாயகத்தை பலப்படுத்துவோம்"** என்பதாகும்.

இந்த தொனிப்பொருள் ஊடாக தேர்தல் ஆணைக்குழுவினால் வசதிகள் வழங்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்படும் டிஜிட்டல் சேவைகள் பற்றி விரிவான வகையில் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- வாக்காளர் பதிவு தொடர்பான தகவல்களை பரீட்சிக்கும் சேவை;
- தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்காக இணையவழியில் கோரிக்கை விடுப்பதற்கான இ - சேவை ;
- இளம் வாக்காளர்களை பதிவு செய்வதற்காக இணையவழியில் கோரிக்கை விடுப்பதற்கான இ - சேவை;
- 2015 ஆம் ஆண்டு முதல் தேருநர் இடாப்பு தகவல்கள் அடங்கிய சான்றிதழை வழங்கும் இ - சேவை;
- வலிமையிழப்புக்குட்பட்ட பிரஜைகளுக்கு வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தல்- வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களுக்கான வலைதள நுழைவாயில் (Portal) ;
- வீட்டில் வசிக்கின்ற அனைவரதும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான பிரதான குடியிருப்பாளர் வலைதள நுழைவாயில் (Portal) ;

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து இ - சேவைகளுக்கும் https://eservices.elections.gov.lk எனும் இணையிணைப்பி மூலம் பிரவேசிப்பதற்கு முடியுமென்பதோடு, இ - சேவைகளுக்கு பிரஜைகளிடமிருந்து சாதகமான கருத்துக்கள் கிடைப்பதுடன், கடந்த ஆண்டில் தேர்தல் இ - சேவைகளூடாக சுமார் 80 இலட்சம் பேருக்கு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

2026 தேருநர் இடாப்பு மீளாய்வு மற்றும் தேர்தல் ஆணைக்குழுவினால் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சேவைகள் தொடர்பாக ஊடக நிறுவனங்களினால் விரிவான பிரச்சாரமொன்று கிடைக்குமென்று மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
**தவிசாளர்/ தேர்தல் ஆணைக்குழு**
**(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)**